# திருத்தங்கல் நகராட்சி

## சாதாரண கூட்டம்

நிகழும் ஸ்ரீவிளம்பி வருடம் தை திங்கள் 17ம் நாள் **31 –01–2019** ம் தேதி வியாழகிழமை காலை **11.00** மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் வைத்து சாதாரண கூட்டம் நடைபெறும்.

**முன்னிலை : திரு.மா. சுவாமிநாதன்**

திருத்தங்கல் நகராட்சி — தனிஅலுவலர்
நாள் . 25–01–2019 — திருத்தங்கல் நகராட்சி

**பொருள்–252**

இந்நகராட்சியில் **01.04.2018** முதல் மேற்கொள்ளப்பட்டு வரும் சொத்துவரி பொது சீராய்வு பணியினை நகராட்சியால் நிர்ணயிக்கப்பட்ட குழுவுடன் ஸ்ரீ அன்னை மகளிர் சுய உதவிக்குழு **45** நபர்கள் **15.12.2018**முதல் **31.12.2018** வரை இணைந்து செயல்பட நகர்மன்ற தீர்மானத்தின் படி அனுமதிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் மேற்படி பணிகள் முடிவடையாத நிலையில் இருப்பதால் ஸ்ரீ அன்னை மகளிர் சுய உதவிக் குழுவில் உள்ள **45** நபர்களை வைத்து சொத்துவரி பொது சீராய்வு பணியினை முடிக்க ஏதுவாக மேலும் ஒரு மாத கால அவகாசம் வழங்குமாறு நகராட்சி குழுவில் உள்ள தலைவர்கள் கோரியுள்ளார்கள். எனவே **01.01.2019** முதல் மேலும் ஒரு மாத காலத்திற்கு ஸ்ரீ அன்னை மகளிர் சுய உதவி குழுவில் உள்ள **45** நபர்களை வைத்து மேற்படி சொத்துவரி பொது சீராய்வு பணியினை மேற்கொள்ள கால நீடிப்பு வழங்கவும், மேலும் ஏற்கனவே அதற்குரிய உத்தேச செலவினம் அனுமதிக்கப்பட்டுள்ளதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. சொத்துவரி பொது சீராய்வு பணியின் அவசர அவசியம் கருதி ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டுள்ள நகராட்சி குழுவுடன் ஸ்ரீ அன்னை மகளிர் சுய உதவிக்குழுவில் உளள **45** நபர்களை வைத்து பணியினை மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண்.2274/2018/அ1)

**பொருள்–253**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு BOV(Battery operator Vehicles)பேட்டரி வாகனம் மூலம் வீடு தோறும் குப்பைகளை தரம் பிரித்து மக்கும் குப்பை/மக்காத குப்பை என தரம் பிரித்து வாங்க தேவையான **50** லிட்டர் குப்பை தொட்டி வாங்க **29/12/2018**ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கு.

| | | |
|---|---|---|
| 1) ஸ்ரீ விநாயகா பார்மா பொள்ளாச்சி | – | ரூ. 1900/Nos |
| 2)ஸ்ரீ பாலாஜி மார்கெட்டிங்,திண்டுக்கல் | – | ரூ. 1850/ Nos |

<u>அலுவலக குறிப்பு–</u>

1) மேற்கண்ட ஒப்பந்தபுள்ளியில் மிக குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த M/S ஸ்ரீ பாலாஜி மார்கெட்டிங்ஸ், திண்டுக்கல் என்ற நிறுவனம் மூலம் சப்ளை செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
2) செலவினம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.3856/2018/எச்1

**பொருள்–254**

இந்நகராட்சி பகுதிகளில் பன்றி காய்ச்சலை பரப்பும் வைரஸை (AHINI)அழிக்கும் லைசால் (lysol) சப்ளை செய்ய **08/01/2019**ல் ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

1) ஸ்ரீ விநாயகா பார்மா பொள்ளாச்சி – ரூ. 320/லிட்டர்
2) ஸ்ரீ பாலாஜி மார்கெட்டிங் திண்டுக்கல் – ரூ. 280/லிட்டர்

மேற்கண்ட ஒப்பந்தபுள்ளியில் மிக குறைந்த ஒப்பந்தப்புள்ளி மதிப்பு அளித்த ஸ்ரீ விநாயகா பார்மா, பொள்ளாச்சி என்ற நிறுவனம் மூலம் சப்ளை செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண். /2018/எச்1)

**பொருள்–255**

இந்நகராட்சி பொது சுகாதார திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் ஒப்பந்த அடிப்படையில் 227 துப்புரவு பணியாளர்களை நியமித்து கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களிடமிருந்து கடிதம் வரப்பெற்றுள்ளது. (எண்.K.D.S.NO. 28369/J3/2018 நாள் 04.12.2018 ) நகராட்சியின் நிதி நிலையை கருத்தில் கொண்டு முதல் கட்டமாக 150 துப்புரவுப் பணியாளர்களை ரூ. 228 லட்சம் மதிப்பீட்டில் ஒரு வருடகாலத்திற்கு ஒப்பந்தமுறையில் ஆன்லைனில் (online)ஒப்பந்தபுள்ளி கோரவும் ஆன்லைனில் (online)ஒப்பந்தபுள்ளி கோர ஏதேனும் ஒரு தமிழ் ஆங்கில நாளிதழில் இயக்குனர், தகவல் மற்றும் செய்தி மக்கள் தொடர்பு துறை தலைமை செயலகம், சென்னை மூலம் விளம்பரம் செய்ய உத்தேச செலவின தொகை ரூ. 60,000/ மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

பொது சுகாதார அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2031/2015/எச்1)

**பொருள்–256**

திருத்தங்கல் நகராட்சி 2019-2020--ம் ஆண்டு பொது நிதி திட்டத்தின் கீழ் வருடாந்திர பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள மன்றத்தில் நிர்வாக அனுமதி பெற தனி அலுவலர்/ ஆணையாளர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | வேலையின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண் 1 முதல் 5 வரை உள்ள குடிநீர் குழாய்கள் பழுது பார்க்கும் வருடாந்திர ஒப்பந்தம் (பொருள்கள் உள்பட) பணி | 10.00 |
| 2 | வார்டு எண் 6 முதல் 10 வரை உள்ள குடிநீர் குழாய்கள் பழுது பார்க்கும் வருடாந்திர ஒப்பந்தம் (பொருள்கள் உள்பட) பணி | 10.00 |
| 3 | வார்டு எண் 11 முதல் 15 வரை உள்ள குடிநீர் குழாய்கள் பழுது பார்க்கும் வருடாந்திர ஒப்பந்தம் (பொருள்கள் உள்பட) பணி | 10.00 |
| 4 | வார்டு எண் 16 முதல் 21 வரை உள்ள குடிநீர் குழாய்கள் பழுது பார்க்கும் வருடாந்திர ஒப்பந்தம் (பொருள்கள் உள்பட) பணி | 10.00 |
| 5 | வார்டு எண் 1 முதல் 7 வரை உள்ள மின் மோட்டார்கள் பழுது பார்க்கும் (வருடாந்திர ஒப்பந்தம்) பணி | 10.00 |
| 6 | வார்டு எண் 8 முதல் 14 வரை உள்ள மின் மோட்டார்கள் பழுது பார்க்கும் (வருடாந்திர ஒப்பந்தம்) பணி | 10.00 |

| | | |
|---|---|---|
| 7 | வார்டு எண் 15 முதல் 21 வரை உள்ள மின் மோட்டார்கள் பழுது பார்க்கும் (வருடாந்திர ஒப்பந்தம் ) பணி | 10.00 |
| 8 | வார்டு எண் 1 முதல் 21 வரை உள்ள மின் தெரு விளக்குகளை பழுது பார்க்கும் (வருடாந்திர ஒப்பந்தம் - கூலி ஒப்பந்தம் மட்டும்) பணி | 5.50 |
| 9 | திருத்தங்கல் நகராட்சி குளோரின் சிலிண்டர் சப்ளை செய்யும் பணி | 4.00 |
| 10 | வார்டு எண் 1 முதல் 21 வரை உள்ள அடிகுழாய்கள் பழுது பார்க்கும் (வருடாந்திர ஒப்பந்தம் கூலி ஒப்பந்தம் மட்டும்) பணி | 5.00 |
| 11 | திருத்தங்கல் நகராட்சி பகுதியில் தற்சமயம் 13 எண்ணம் உயர்மின் கோபுர விளக்குகள் இயக்கப்பட்டு வருகின்றது. அவற்றிக்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளும் (வருடாந்திர ஒப்பந்தம் மற்றும் பொருள்கள் உள்பட) பணி | 4.00 |
| 12 | திருத்தங்கல் நகராட்சி பகுதியில் உள்ள ஆழ்துளை கிணறுகளுக்கு புதிய மின் மோட்டார்கள் மற்றும் பேனல் போர்டுகள் சப்ளை செய்யும் பணி | 10.00 |
| 13 | திருத்தங்கல் நகராட்சியில் ஆழ்துளை கிணறு மற்றும் திறந்த வெளி கிணறுகளில் இயங்கும் மின் மோட்டார் பராமரிக்க தேவையான உதிரி சாமன்கள் சப்ளை செய்தல் | 10.00 |
| 14 | திருத்தங்கல் நகராட் சி தெருவிளக்குக்கு தேவையான மின் உபரி சமான்கள் கொள்முதல் செய்யும் பணி. | 5.00 |
| 15 | திருத்தங்கல் நகராட்சி வார்டு எண். 1 அண்ணாகாலனி பகுதியில் உள்ள கிணற்று நீர் குழாய்களை மாற்றி அமைக்கும் பணி. | 5.00 |

மேற்படி பணிகளை பொதுநிதித் திட்டம் 2019-2020-ன் கீழ் மேற்கொள்ள ஆணையர் அவர்களின் அனுமதிக்கு

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்:199 /இ1/2019

**பொருள்–257**

இந்நகராட்சியின் **2018–19**ஆம் ஆண்டிற்கு தயார் செய்துள்ள நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது

அலுவலகக்குறிப்பு–
மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
ந.க.எண்.784/2015/சி1

தனி அலுவலர் மற்றும்/ஆணையாளர்
திருத்தங்கல் நகராட்சி